2022 அக்டோபர் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

குடிநீர் குழாய்

*16252—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 73-வது வார்டு, பெல்விடர் கிராமத்தில் குடிநீர் குழாய் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின் சென்னை குடிநீர் வாரியம்மூலம் ரூ.31 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் மேற்படி பெல்விடர் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டு 15 நாட்களுக்கு முன் முடிக்கப்பட்டன. மேற்படி பெல்விடர் கிராமத்தில் உள்ள பொதுமக்கள் தங்களது வீடுகளுக்குக் குடிநீர் இணைப்புப் பெற இணையதளம்மூலம் விண்ணப்பித்து, அதற்குண்டான தொகையைச் செலுத்தி, குடிநீர் இணைப்பைப் பெற்றுக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

முற்பகல் 10-20

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைந்து நடவடிக்கை எடுத்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி,*

[2022 அக்டோபர் 19

வார்டு எண் 73, பெல்விடர் கிராமப் பகுதியில் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட குடிநீர் பைப்புகள் என்பதால், அந்த பைப்புகள் சேதமடைந்து, சிதிலமடைந்து அந்தக் குழாய்கள்மூலம் தண்ணீர் விநியோகம் செய்ய முடியாத சூழ்நிலையில், நேற்று வரை, லாரிகளில்தான் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. இன்றைக்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து பணிகள் முடிக்கப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார். அதற்காக இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல் பெல்விடர் கிராமப் பகுதிக்கு அருகில் இருக்கின்ற பென்ஷனர்ஸ் லைன், வார்டு எண் 73-ல் இருக்கின்ற கன்னியாபுரம் பகுதியைச் சுற்றியிருக்கின்ற எம்.எஸ். முத்துநகர், தாஸ் நகர், வாசுகி நகர், கால்வாங்கரை பகுதி, வெங்கடேசபுரம் புதிய காலனி, வெங்கடேசபுரம் பழைய காலனி, நரசிம்மன் நகர், அம்பேத்கர் நகர், திரு.வி.க. நகர், திரு.வி.க. நகர் புதிய பகுதி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் தொகுதியில் உள்ள அனைத்து இடங்களையும் கூறிவிட்டீர்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஸ்தூரிபாய் நகர் 'ஏ' பிளாக், 'பி' பிளாக், வ.உ.சி. நகர் 1, 2, 3 ஆகிய குறுக்குத் தெருக்களில் இதைப்போலவே லாரிகளின்மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. இப்படி லாரிகளின்மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்படுவதால், அங்கு புதியதாகப் போடப்பட்ட சாலைகள்கூட ஆங்காங்கே சேதமடைகின்றன. அப்படி சேதமடைவதால், அந்தச் சாலைகளின் கீழே போடப்பட்டுள்ள கேபிள் ஒயர்களில் அடிக்கடி பழுது ஏற்பட்டு மின்சாரம் தடைபட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மின்சாரம் தடைபடக்கூடிய ஒரு இக்கட்டான சூழ்நிலை. அதுமாத்திரமல்லாமல், லாரிகளில் தண்ணீர் விநியோகிக்கப்படுவதால், அடிக்கடி விபத்துகளும் நடைபெறுகின்றன. எனவே, இந்த நிலையைக் களைவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்திட வேண்டும். திரு.வி.க. நகர் தொகுதி முழுவதும் இதைப்போலவே லாரிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

2022 அக்டோபர் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்கு இன்னொரு கேள்வியும் இருக்கிறது.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *அதையும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில், பெரம்பூர், ஏகாங்கிபுரம், பட்டாளம், புளியந்தோப்பு, நம்மாழ்வார்பேட்டை, கொசப்பேட்டை, ஓட்டேரி ஆகிய பகுதிகள் அடங்கும். இத்தொகுதி 4,04,609 மக்கள் தொகையையும், 679 தெருக்களையும் கொண்டதாகும். இப்பகுதிகளுக்குத் தினமும் 24.70 மில்லியன் லிட்டர் குடிநீர் குழாய்கள்மூலம் மற்றும் லாரிகள்மூலம் வழங்கப்படுகிறது. மேலும், மக்கள் பயன்பாட்டிற்காக 449 பொதுக் குழாய் பம்புகள்மூலமும் 6 ஆயிரம் லிட்டர் மற்றும் 9 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட லாரிகள்மூலமும் 331 குடிநீர்த் தொட்டிகளும், 63 லாரி நடைகளும் பொது விநியோகமாகக் குடிநீர் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிற பகுதிகளில், குழாய்கள் பதிப்பதற்கு கொஞ்சம் சிரமமாக இருக்கிறதென்று சொன்னால், மிகக் குறுகலான தெருக்களாக அவை இருக்கின்றன. அவற்றில் ஏற்கெனவே கழிவுநீர்க் குழாய்கள் செல்வதால், அங்கு தோண்டும்போது இரண்டுமே வீணாகிவிடக்கூடிய காரணத்தால்தான் லாரியிலே தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறோம். மேலும், இப்போது கிட்டத்தட்ட 100 கிலோ மீட்டர் அளவுக்கு வடசென்னையிலே குழாய்களை மாற்றியமைக்கும் பணி நடைபெற்று முடிந்திருக்கிறது. எனவே, நீங்கள் சொல்கிற பகுதியை நீங்கள் எழுதித் தருவீர்களானால், எது எது சரியாகச் செய்ய முடியுமென்பதை அறிந்து, அதிகாரிகளைக் கலந்துபேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று செய்யலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

[2022 அக்டோபர் 19

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போலவே, லாரிகளின்மூலம் குடிநீர் விநியோகம் செய்கின்ற பகுதிகள் அனைத்தும் குறுகிய தெருக்கள் என்பதால், பள்ளிக்குச் செல்கின்ற பிள்ளைகளும் வேலைக்குச் செல்கின்ற பொதுமக்களும் மிகுந்த அளவில் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதால்தான், இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன். எனவே, நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுவாக எழுதித் தரும்படி கேட்டிருக்கிறார்கள். எழுதிக் கொடுத்து விடுங்கள். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துகளைக் கருத்திற்கொண்டு, அதிகாரிகளோடு கலந்துபேசி, நிதிநிலைமைக்கேற்ப, விரைவிலே செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.

திரு. ஜோசப் சாமுவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு 84–ல் உள்ள கொரட்டூர் 67–வது தெரு, T.N.H.B. காலனியில் பத்தாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டுள்ள சுமார் 11 இலட்சம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட குடிநீர் விநியோக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி எந்தவிதப் பயன்பாடும் இல்லாமல் உள்ளது. இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி குறைந்தபட்சம் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இருந்தால்தான் பயன்பாட்டுக்கு வரும். எனவே, கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அமைத்து மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2022 அக்டோபர் 19]

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் ஆவடி நகரில் 24 மணி நேரமும் தண்ணீர் தருகிற திட்டத்தைத் தொடங்கி வைத்து, ஆவடி நகர் பகுதி முழுவதும் தண்ணீர் வழங்கப்பட்டிருக்கிறது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இல்லாமல், தரையில் தொட்டி அமைத்துத் தர வேண்டுமென்று அப்போதே சொன்னார்கள். குறிப்பாக, சென்னை மாநகருக்கு, ஆவடி பகுதியிலிருந்துதான் அதிகளவில் தண்ணீர் வருகிறது. அங்கேயிருக்கும் ஏரியைச் சுத்தம் செய்து, சுத்தமான ஏரி நீரைத் தர வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் திரு. நாசர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். எனவே, அதிகாரிகள் சென்று ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற* sump *அமைத்தல் உள்ளிட்ட அந்தப் பணிகள் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகர ராஜா அவர்கள்.*

திரு. எ.எம்.வி. பிரபாகர ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது, விருகம்பாக்கம் தொகுதியில் பிரதான பிரச்சினையாக,* manhole*-லிருந்து கழிவுநீர்* overflow *ஆகிக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, எங்கள் தொகுதியில் 30 மற்றும் 40 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட கழிவுநீர்க் குழாய்கள்தான் உள்ளன. இன்றைக்கு ஏறக்குறைய 70 சதவிகிதத் தெருக்களில் இந்தப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. திங்கட்கிழமை அன்று சென்று அந்தப் பணியைச் செய்தால், மீண்டும் புதன்கிழமை அதே இடத்தில் கழிவுநீர்* overflow *ஆகிக் கொண்டிருக்கிறது.* Pumping stations*-ம் மிகவும் குறைவாக இருக்கின்றன. அன்றையதினம் குழாய்கள் பதித்தபோது 50,000, 70,000, ஒரு இலட்சம் வரைதான் மக்கள் வசித்து வந்தனர். ஆனால், இன்றைக்கு ஏறக்குறைய 7 இலட்சம் மக்கள் வசித்து வருகின்றார்கள்.* Commercial complexes *மற்றும் நட்சத்திர விடுதிகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, இந்தக் கழிவுநீர் பிரச்சினைக்கு நவீன உத்திகளைப் பயன்படுத்தி*

தீர்வு காணப்படுமா என்பதையும், சூளைப்பள்ளம் பகுதியில் 57 தெருக்களுக்கு 40 ஆண்டுக் காலமாகக் கழிவுநீர் வடிகால் வசதியே இல்லாமல் இருக்கிறது, அந்தப் பகுதிகளுக்கு புதிய கழிவுநீர் வடிகால் அமைக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் அவரோடு சென்று அவர் பகுதியைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறோம். ஏற்கெனவே, அண்ணா சாலையிலிருந்து கலைஞர் பெயரில் இருக்கின்ற நகருக்குச் செல்கின்ற அந்தக் கழிவுநீர் pipe சிமென்டால் ஆனது. கிட்டத்தட்ட 15 அடி, 20 அடி ஆழத்தில் இருக்கின்றது. காலை நேரங்களில் முழுமையாகக் கழிவுநீர் செல்கிறபோது அந்தக் குழாய்கள் சேதமடைவதில்லை. மதிய வேளையில் பாதியளவு தண்ணீர் செல்கிறபோது, gas உற்பத்தியாகி, அந்த pipe line-கள் எல்லாம் உடைந்து, சாலைகளெல்லாம் சேதமடைந்து விடுகின்றன. இதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது, அதிக நிதி ஒதுக்கி, புதிய குழாய் அமைக்கும் பணிக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். இப்போதுகூட அந்தப் பகுதிகளில் 51 கோடி ரூபாய் செலவில் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் என்னோடு நேரடியாக வந்து பார்த்தார். பல இடங்களில் குடிநீர் இல்லையென்று சொல்கிறார்கள். குடிநீரைப் பொறுத்தவரையில், சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு 990 மில்லியன் லிட்டர் குடிநீர் இப்போது லாரிகள் மூலமாகவும் பைப்புகள் மூலமாகவும் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இன்னும் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து 250 MLD நீர் கொண்டு வர வசதி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை ஆய்வு செய்து, அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து என்ன செய்யலாம் என்பதைக் கண்டறிந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று, பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

2022 அக்டோபர் 19]

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விளாத்துறை முதல் கன்னியாகுமரி வரையுள்ள பகுதிகளில் சுனாமி கூட்டுக் குடிநீர்த் திட்டம், 2006 ஆம் ஆண்டில் அந்த* project *தொடங்கப்பட்டு, 79 கடலோரக் கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. அன்றைக்குப் போடப்பட்ட குழாய்கள் எல்லாம் சிமென்ட்டினால் ஆனவையாகும். அதாவது, சாலையின் நடுப்பகுதியில் குழாய்களைப் பதித்திருக்கிறார்கள். சாலையின் நடுப்பகுதியில் குழாய்கள் பதித்திருக்கிற காரணத்தினால், நீரில் அழுத்தம் ஏற்பட்டு, எப்போதும் அந்தக் குழாய்களில், 100 மீட்டர் என்ற அளவில் குழாய்கள் உடைந்து, தண்ணீர் வெளியில் வந்து சாலையோரங்களில் தேங்கி, மக்கள் போக முடியாத அளவிலும், போக்குவரத்திற்குப் பயன்படுத்த முடியாத நிலையிலும், சாலை பழுதடைந்திருக்கின்றது. அந்தச் சாலையை சரி செய்வதற்காக மரியாதைக்குரிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், மேற்படி சாலையை சரி செய்ய வேண்டுமென்று சொன்னால், குடிநீர் வரும் அந்த சிமென்ட் குழாய் முழுவதையும் எடுத்துவிட்டு, இப்போதிருக்கிற புதிய* technology*-படி* DI pipe*-ஐ அமைத்தால்தான், அந்தச் சாலை முழுமையாகச் சீரமைக்கப்படும். எனவே, தயவுசெய்து இதில் முழுமையான கவனம் செலுத்தி அந்த சிமென்ட் குழாய்களை அகற்றிவிட்டு,* DI pipe*-களை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது உண்மைதான். சிமென்ட் குழாய்கள்மூலம் தண்ணீர் போகின்றபோது, அதில் அழுத்தம் ஏற்படுவதன் காரணமாக பல இடங்களில் குழாய்கள் உடைந்து விடுகின்றன. அதனை மாற்றி* DI pipe*-களைப் போடலாம் என்று சொன்னால்—இன்றைக்கு டெல்லியில் உள்ள ஒரே ஒரு நிறுவனம் மட்டும்தான் அந்தக் குழாய்களைத் தயார் செய்வதால்-விலையை அதிகப்படுத்திவிட்டார்கள். எனவே, புதிய குழாய்களை அமைப்பதற்கு, ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட நிதிக்கும் தற்போது உள்ள நிதிக்கும் வித்தியாசம் இருக்கிற காரணத்தினால்,*

குழாய்களை அமைக்க தாமதமாகிறது. அதனால்தான், கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களுக்குத் துறையின் அதிகாரிகள் சென்று, அங்கு அவர்கள் குழாய்களை எவ்வாறு கொள்முதல் செய்கிறார்கள் என்பதை அறிந்து, மூன்று வகையான குழாய்களைக் கொள்முதல் செய்யலாம் என தற்போது அரசு அனுமதியளித்திருக்கிறது. விரைவில் இந்த இடங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எடுக்கப்பட இருக்கிறது.

70 இலட்சம், 80 இலட்சம் மக்கள் என அன்றைக்குக் கணிக்கப்பட்டு, குழாய்கள் அமைக்கப்பட்டன. தற்போது மக்கட்தொகை அதிகரித்ததன் காரணமாகவும், குடிநீர் பைப்புகளில், அதிகமான அழுத்தம் ஏற்படும்போது குழாய்கள் உடைந்துவிடுகின்றன. இதைக் கருத்தில் கொண்டு ஒவ்வொன்றையும் ஆய்வு செய்து, எந்தெந்தப் பகுதிகளுக்கு உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். கொள்ளிடத்தில்கூட குழாய்கள் சரிசெய்யப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அங்கும் உடனடியாக நேரில் சென்று ஆய்வு செய்து, குழாய்கள் சரி செய்யப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது அதிகாரிகள்மூலம் கண்காணிக்கப்பட்டு, விரைவில் அந்தப் பைப்புகள் மாற்றியமைக்கப்படும். அதற்கு சற்று காலதாமதம் ஆகும். ஆனால், அதற்குள், "சட்டமன்றத்தில் சொல்லிவிட்டீர்களே! அது எங்கே" என்று உடனடியாகக் கேட்கக் கூடாது. அதற்கு சற்று காலதாமதமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தித் தந்தமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு குடந்தை மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கும்பகோணத்தில் தினசரி 2 இலட்சம் லிட்டர் முதல் 3 இலட்சம் லிட்டர் வரை அங்குள்ள மக்களுக்கு தண்ணீர் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். தற்சமயம் கொள்ளிடம் ஆற்றிலிருந்து

2022 அக்டோபர் 19]

குடிதாங்கி மற்றும் காவல்கூடம் ஆகிய இடங்களிலிருந்து pumping மூலமாக தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. மழைக் காலங்களிலும், வெள்ளக் காலங்களிலும் கொள்ளிடம் ஆற்றில் தண்ணீர் அதிக அளவில் செல்கின்ற காரணத்தினால், pumping scheme-ல் போடப்பட்டிருக்கின்ற தண்ணீர் பைப்புகளெல்லாம் நீரில் அடித்துச் செல்லப்படுகின்ற காரணத்தினால், குடிதண்ணீர் வழங்குவதற்குத் தடையாக இருக்கிறது. இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, pumping station-லிருந்து கரை வரையிலும் concrete pillar அமைத்து, pipeline-ஐ அதற்கு மேல் அமைத்தால் பிற்காலத்தில் தடையில்லாமல் நிச்சயமாக தண்ணீர் வழங்க முடியும் என்பதால் விரைந்து செயல்படுகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பகுதியை நேரடியாக வந்து ஆய்வு செய்து, விரைவில் அந்தப் பகுதி மக்களின் தண்ணீர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கின்றபோது, குழாய்களை ஆற்றின் கீழே பதித்துதான் கரைக்குக் கொண்டு வருவார்கள். ஏற்கெனவே அப்படித்தான் செய்யப்பட்டது. ஆனால், அதில் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டுவிட்டது. அதனால், தற்பொழுது புதிதாக தண்ணீர் எடுக்கும் இடங்களில் குழாய்களை கீழ்வழியாகக் கொண்டு வராமல் மேலே மேம்பாலங்களின்மூலம் கொண்டு வரும் விதமாக, புதிய திட்டங்களனைத்தும் அப்படித்தான் வடிவமைக்கப்படுகின்றன. ஏற்கெனவே, அதுபோன்று குழாய்கள் உடைந்திருக்கின்ற பகுதிகளில் புதிய முறைப்படி குழாய்களை அமைத்து, எந்தவித சேதாரமும் இல்லாமல் தண்ணீர் கொண்டு வருகின்ற பணியை நிச்சயமாக அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.